2025-ம் ஆண்டு வாக்குத்தத்தம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. யோசுவா 1:5

# பரிசுத்த பர்வதம்

## செய்தி மலர்

ஜூலை மாத இதழ்



# நான் உன்னில் மகிமைப்படுவேன்.

ஏசாயா 49:3

**IN YOU, I WILL BE GLORIFIED [GOD].**

**ISAIAH 49:3**


Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்

Pr. S. காலேப் ராபர்ட் M.Div.,



| HMSM | XXVII | JUL |

# சபையின் இலக்குகள் – 2025

1. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 5000
2. மொத்த பராமரிப்புக்குழுக்களின் எண்ணிக்கை 300
3. மொத்தம் 50 மிஷனெரிகளை வட இந்தியாவில் தாங்குதல்
4. மிஷனெரிகளுக்கு மாதம் ரு.3,00,000/- (3 லட்சம்) அனுப்புதல்
5. சபைக்கு 2 ஏக்கர் நிலம் வாங்குதல் (Revival Centre)
6. கிளை சபை 2 ஆரம்பித்தல்
7. சபைக்கு 2 வேன் வாங்குதல் (ரு 20 பெட்டி)
8. வட இந்தியாவில் 2 ஆலயங்கள் கட்டுதல்
9. முழங்கால் ஜெப யுத்த வீரர்கள் 500 பேரை எழுப்புதல்
10. ஞானஸ்நானம் 200 நபர்களுக்கு
11. முழு நேர ஊழியர்கள் 2, மிஷனெரிகள் 2 எழுப்புதல்
12. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களிலிருந்து ஜனங்கள் ஆராதனைக்கு வர
13. மீனாட்சிபட்டியில் ஆலயம் கட்டுதல்
14. புதுக்கோட்டையும் அதை சுற்றியுள்ள 65 கிராமங்களில் ஜெப யுத்தம் 2 முறை செய்தல்
15. தலைவர்களுக்கான ஊழிய பயிற்சி 2 நடத்துதல்
16. அதிகாலை ஆராதனைக்கு சபையில் 250, Online இல் 1000 நபர்களை கூட்டி சேர்த்தல்
17. சபையிலிருந்து வட இந்தியாவுக்கு மிஷன் பிரயாணம் செய்தல் (குழுவாக)
18. சபையின் கல்லறைத் தோட்டத்தை விரிவாக்கம் செய்தல்
19. V.B.S சிறப்பாக 150 இடங்களில் நடத்துதல்
20. சிறுவர் முகாம் 1
21. வாலிபர் முகாம் 1
22. பெண்கள் முகாம் 1
23. புருஷர்கள் முகாம் 1
24. மாதந்தோறும் நடைபெற்று வருகிற அமாவாசை ஜெபத்தில் 120 பேர் கூடுதல்

# நமது சபையின் ஊழியங்கள் 15 வகை

1. கிராம ஊழியம்
2. பத்திரிக்கை ஊழியம்
3. மிஷனெரி ஊழியம்
4. T.V ஊழியம்
5. மருத்துவமனை ஊழியம்
6. ஜெப நடை ஊழியம்
7. சிறுவர்கள் ஊழியம்
8. பின்தொடர் ஊழியம்
9. நேசக்கரங்கள் ஊழியம்
10. ஜெப யுத்த ஊழியம்
11. மாணவர்கள் மத்தியில் ஊழியம்
12. பராமரிப்புக்குழு ஊழியம்
13. ஆலோசனை ஊழியம்
14. மீடியா ஊழியம்
15. C.O.C ஊழியம்.

## இந்த மாத வாக்குத்தத்தம்

# நான் உன்னில் மகிமைப்படுவேன்.

ஏசாயா 49:3

### ஆசிரியரிடமிருந்து...

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்...


மீண்டும் இந்த செய்திமலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டின் பாதியை கடந்து வர கர்த்தர் உதவி செய்தார். மீதி பாதி வருடத்தை அற்புதமாய் கடந்து செல்ல கிருபை தருவார்.

விஷேசமாக இந்த மாதம் தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் மேன்மைப்படுத்துவார். ஒரு வேளை கடந்த ஆறு மாதங்களில் பல வித்தியாசமான பிரச்சனைகளை போராட்டங்களை கடந்து வந்திருக்கலாம். தீயையும் தண்ணீரையும் கடந்து வந்திருக்கலாம். ஆனாலும் தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் கைவிடவில்லை. உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்கிறேன். எனக்காகவும் குடும்பத்திற்காகவும் சபைக்காகவும் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.



**கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.**

**Rev. Dr. J. Samuel Jebaraj**



# வேலை என்பது சாபமா? ஆசீர்வாதமா?

**ஆண்கள் பகுதி**

இன்று உலகத்தில் 55 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் வேலையில் திருப்தி அடையவில்லை என்று ஒரு ஆய்வு கூறுகிறது. பல கிறிஸ்தவர்கள்கூட வேலை என்பது ஆதாமின் மீறுதலால் வந்த சாபம் என்று எண்ணுகிறார்கள். எனவே, வேலையைக் குறித்த வேதத்தின் கண்ணோட்டம் என்ன எனப் பார்ப்போம்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி 2:15). ஆனால் மனிதனின் விழுகை வேலையைக் கடினமானதாக மாற்றிவிட்டது (ஆதி 3:17). நம் வேலையில் இயேசுவே நம் முதலாளி என்றும் அவர் கண்கள் நம்மை கவனித்துக் கொண்டு இருக்கின்றன என்பதையும் அறிந்து உண்மையாய் வேலை செய்ய வேண்டும். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலொ 3:23,24)

நாம் செய்யும் வேலை நமக்கு ஆசீர்வாதமாக மாற முதலாவது, முன்னேற வேண்டும் என்ற வாஞ்சையோடு முழு பெலத்தோடு உழைக்க வேண்டும். "நீங்கள் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள் (கொலோ3:22, எபே 6:9) என்று வேதத்தில் நாம் பார்க்கிறோம். அதன்படி அதிகாரிகள் பார்க்கும்போது மட்டுமல்ல பார்க்காத போதும் வேலையை உண்மையாக செய்யுங்கள். வேலையில் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருங்கள். வேலைக்கேற்ற திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.பூமிக்குரிய முதலாளியைக் கனம் பண்ணுங்கள். 1 பேதுரு 2:18 ல் வேலைக்காரரே அதிக பயத்துடனே உங்கள் எஜமாங்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள் என்றிருக்கிறதே.

செய்யும் வேலையைக் குறித்து வெட்கப்படாதீர்கள். வேலையில்லாமல் கஷ்டப்பட்டுபவர்களை நினைத்துப்பாருங்கள். கர்த்தர் தந்த வேலைக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். வேலை செய்யும் இடங்களில் பொருட்களைத் திருடாதீர்கள். வேதத்தில், தங்கள் எஜமான்களுக்குக் கீழ்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல் எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து, சகலத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திச்சொல்லு (தீத் 2:10, லேவி19:11) என்றிருக்கிறதே.

நம்மைப் போஷிக்கவும், நமக்குள் தெய்வீக பண்புகளை வளர்க்கவுமே தேவன் வேலையைத் தந்துள்ளார். மற்றவர்களுடைய வேலையோடு ஒப்பிடாதீர்கள். உண்மையாக உழைத்து வேலையில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். ஏனெனில் நாம் நமக்காக அல்ல நம் எஜமானர் கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ்வோமாக...

## புருஷர் ஐக்கிய கூட்டம்

திங்கட்கிழமை தோறும்
இரவு 8.00 -8.45 மணி வரை

இணைந்து ஜெபிக்க யாவரையும்
அன்புடன் அழைக்கிறோம்..

பெண்கள் பகுதி

# (உன்) சூழ்நிலை மாறும்

Mrs. பெர்சியாள் ஜெபராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பெண்களாகிய உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருக்கிறீர்களா! கர்த்தர் நல்லவர். பெண்களாகிய நாம் அடிக்கடி சூழ்நிலைகளைப் பார்த்து சோர்ந்து போவதுண்டு. கலங்கி விடுவதும் உண்டு. ஆனால் நாம் ஆராதிக்கின்ற நம் தேவன் சூழ்நிலைகளைக் காட்டிலும் பெரியவர். காற்றையும் கடலையும் பார்த்து, இரையாதே அமைதலாயிரு என்று சொல்ல மிகுந்த அமைதல் உண்டாயிற்றே. இயேசு இன்றும் ஜீவிக்கிறார். உங்கள் வாழ்வின் சூழ்நிலை எவ்வளவு கடினமாய் இருந்தாலும் மிகுந்த அமைதலை உண்டாக்க வல்லவர். அதற்கு நாம் செய்ய வேண்டியது,

**1) விசுவாசம்:**

நம் ஆண்டவர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்ற விசுவாசம். அவரைத் தேடுகிறவர்களை அவர் கைவிடுவதில்லை. அவரை நோக்கிக் கூப்பிடும்போது நம் கூப்பிடுதலின் சத்தத்தைக் கேட்கிறவர். நம்மை மறவாதவர், நம்மை விட்டு விலகாதவர். ஆகவே இயேசுவின் மேல் அவருடைய வார்த்தையின் மேல் அவருடைய வல்லமையின் மேலுள்ள விசுவாசத்தை விட்டுவிடாதீர்கள். விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயது சென்றவளாயிருந்தும் பிள்ளைப் பெற்றாள். பெண்களே! நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கின்ற ஜெயம் விசுவாசித்தால் தேவ மகிமை வெளிப்படும். நம் சூழ்நிலை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் விசுவாசத்தில் ஜெயிக்கலாம்.

**2)கீழ்ப்படிதல்:**

யார் ஒருவர் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார்களோ, அவர்கள் சூழ்நிலையில் மாற்றம் ஏற்படும். வேலைகாரர்களின் கீழ்படிதல் கானாவூர் கல்யாண வீட்டில் குறைவை மாற்றிற்று. ஷீலோவாம் குளத்தில் போய் கழுவு என்ற வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சென்ற பிறவிக் குருடன் பார்வையடைந்தவனாய் திரும்பி வந்தான். சாராள், தன் புருஷனை ஆண்டவனே என கூப்பிட்டு கீழ்ப்படிந்திருந்தாள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியாத ஏவாள் ஆசீர்வாதத்தை இழந்து போனாள். பெண்களே! சத்தியத்தை அறிந்து கீழ்ப்படிந்தால் விடுதலை.

**3)அர்ப்பணிப்பு:**

யார் ஒருவர் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு முழுவதும் அர்ப்பணிக்கிறார்களோ! அவர்களை கர்த்தரே பொறுப்பெடுத்து எந்த சூழ்நிலையிலும் அற்புதமாய் நடத்துவார். நம் பாதை எப்படிப்பட்ட பாதையாயிருந்தாலும் அவரே முன் செல்வார். கோணலானதை செம்மையாக்குவார். கரடு முரடானதை சமமாக்குவார். தடையாய் இருப்பவைகளை தகர்த்துப் போடுவார். யுத்தத்தை முன் நின்று நடத்துவார். பெண்களே! அர்ப்பணியுங்கள். தோல்வி என்பதே இல்லை.


பெண்கள் ஆராதனை

செவ்வாய் தோறும் காலை
10:00 -11:30
மணி வரை நமது சபையில்
வைத்து நடைபெறுகிறது.

LIVE STREAMING




வாலிபர் பகுதி

# கனி கொடுக்காதிருக்கிற கொடியை அறுத்துப்போடுகிறார்

**பொறுப்பு**: Pr. **காலேப் ராபர்ட்**
**உதவி**: Bro. **பிலிப்**

அன்பான வாலிப பிள்ளைகளே, இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதமும் நாம் தேவனுக்குள் இன்னும் அதிகம் வளர வேண்டும் என்று பிரயாசப்படுகிறோம். தேவையான காரியங்களை கற்றுக்கொள்ளுவது மட்டுமல்லாமல், தேவை இல்லாததை அகற்றவும் வேண்டியது அவசியம் என்று பார்த்து வருகிறோம்.

சில நேரங்களில் நான் யோசிப்பது உண்டு– நம்மிடத்தில் என்ன கண்டு, தேவன் நம்மை நேசிக்கிறார் என்று! எத்தனை முறை ஆவியானவரின் எச்சரிக்கையை கடந்து, துணிகரமாக சிலரோடு தொடர்ந்து பழகுவது, வீணான காரியங்களை பேசுவது, செய்வது என்று எவ்வளவு தேவனை நாம் துக்கப்படுத்தி இருப்போம்! இருந்தும், நம் மேல் இத்தனை அன்பும் கிருபையும் அவர் இன்னும் தொடர்ந்து காட்ட வேண்டிய அவசியம் என்ன?

யோவான் 15:2 – என்னில் கனிகொடுக்காதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் செய்கிறார்.

மேற்காணும் வசனத்தின் முதற்பகுதியை கவனம் செலுத்தலாம்– "கனிகொடுக்கிற கொடி எதுவோ...". நான் யோசிக்கிறேன் ஒரு வேளை, ஒரு காலத்தில் நாம் தேவனுக்கு கொஞ்சம் கனி கொடுத்திருப்போம் என்று. உண்மையாக ஊழியத்தில் பணி செய்திருப்போம், பாரத்தோடு பலர் இரட்சிக்கப்பட ஜெபித்திருப்போம், நம் நண்பர்கள் கேலி செய்தாலும் பரவாயில்லை என்று தேவனுக்கு பிரியமாக வாழ்ந்திருப்போம், பாவத்தை மேற்கொள்ள தேவனிடம் மன்றாடி இருப்போம். தேவன் இதையெல்லாம் ஒரு ஜாடியில் கணக்கில் வைத்திருக்க வேண்டும். நாம் இப்போழுது தேவனுக்கு பிரியமில்லாத ஏதாகிலும் காரியம் செய்யும்பொழுது, அவர் அந்த ஜாடியைப் பார்க்கிறார். ஒரு காலத்தில் எனக்கு கனி கொடுத்த என் பிள்ளை அல்லவா?! அவன்/அவள் இன்னும் அதிக கனிகளை கொடுக்க வேண்டும் என்று சுத்தம் செய்கிறார். அதினாலேயே நம்மை உடைக்கிறார்.

கோபம், வைராக்கியம், வெறுப்பு, பகை, முகம் சுழிப்பு, இச்சை, தவறான நோக்கம், வீணான பேச்சு, நண்பர்கள், பண ஆசை, பதவி ஆசை, ஜெபம் மற்றும் வேத வாசிப்பு குறைவு இதெல்லாம் முற்றிலும் அகற்ற விரும்புகிறார். உன்னை தேவன் இழக்க விரும்பவில்லை. தன் சொந்த குமாரனை உனக்காக அவமானப்படுத்த, அடிக்க தேவன் ஒப்புக்கொடுத்தாரே! எத்தனைப் பெரிய அன்பு. அவரிடம் முழுவதும் உன்னைக் கொடுத்து விடு மகனே, மகளே. அவரின்றி நிம்மதியான, சந்தோஷமான வாழ்க்கை எது உண்டு?

**GOD BLESS YOU**



# விசுவாசித்து பெற்றுக்கொள்

பொறுப்பு:
Mrs. லீலிதனராஜ்

**அன்பான சிறுபிள்ளைகள் அனைவருக்கும்
இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**



பள்ளியின் முதல் நாளன்று, ரவி உற்சாகமாக மிகுந்த எதிர்பார்ப்புடன் பள்ளிக்கு நடந்து சென்று கொண்டிருந்தான். வழியில் அவனோடு படித்த சகமாணவன் தினேஷ், புதிய சைக்கிளுடன் " ரவி, என் அப்பா எனக்கு வாங்கிகொடுத்த சைக்கிள் எப்படி இருக்கிறது? உனக்கு முன்னாடி நான் ஸ்கூலுக்கு போயிடுவேன்" என்று நக்கல் செய்துவிட்டு சென்றான். ரவியின் முகம் வாடியது. அவன் குடும்பமோ ஏழ்மையானது. அவனுடைய அப்பா கூலி வேலை செய்து தான் அவனை படிக்க வைக்கிறார். அதனால் அவன், புது சைக்கிள் கேட்டு தனது அப்பாவை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. எப்போழுதும் படிப்பதற்கு முன்பாக வேதம் வாசிப்பதை வழக்கமாக வைத்திருந்தான். அன்று மனச்சோர்வுடன் இருந்தாலும் படிப்பதற்கு முன்பாக வேதத்தை எடுத்து வாசித்தான். மாற்கு 9:23 – இயேசு அவனை நோக்கி "நீ விசுவாசிக்ககூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும்" என்ற வசனத்தை வாசித்தவுடன் மகிழ்ச்சியுடன் இயேசுவிடம் " நான் விசுவாசிக்கிறேன், எனக்கு ஒரு சைக்கிள் கிடைக்கும் என்று விசுவாசிக்கிறேன்" என்று ஜெபித்தான். ஜெபித்து முடித்ததும், ஒரு சத்தம் கேட்டது. " ரவி, ரவி...வெளியே வா" என்று அப்பா கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்த அவனுக்கு ஒரே ஆச்சரியம்! அவன் வீட்டிற்கு முன்பாக புதிய சைக்கிள் இருப்பதை கண்டான். " உனக்கு தான் ரவி, இந்த புதிய சைக்கிள், எனது முதலாளியின் மகனுக்கு வெளிநாட்டில் அவன் விரும்பிய வேலை கிடைத்ததால் வேலை செய்யும் அனைவருக்கு வெகுமதி கொடுத்தார்கள். என்னிடம் மட்டும் உனக்கு மகன் இருக்கிறான் அல்லவா? என்று கேட்டு, புதிய சைக்கிள் ஒன்றைக் கொடுத்தார்கள்" என்றார் அப்பா. ரவிக்கு மிகுந்த சந்தோஷம், தனது அறைக்குள் ஓடி முழங்கால் படியிட்டு, " நன்றி இயேசுவே" என்று கண்ணீரோடு கூறினான். தொலைபேசியில் முதலாளிக்கு நன்றி கூறினான். இனி நான் எதற்கும் கவலைப்பட மாட்டேன். விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது இயேசு எனக்கு எல்லாவற்றையும் வாய்க்கப் பண்ணுவார் என்று மகிழ்ச்சியோடு தனது அப்பாவிடம் கூறினான்.





அன்பான சிறுபிள்ளைகளே, நாமும் ரவி போல விசுவாசத்தோடு ஜெபித்தால் நிச்சயமாக தேவன் நமது ஜெபத்தைக் கேட்பார். தினமும் வேதத்தை வாசித்து, ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

மனப்பாடவசனம்: மாற்கு 9:23

**இயேசு அவனை நோக்கி "நீ விசுவாசிக்ககூடுமானால் ஆகும்,
விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும்" என்றார்.**

சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்கள் & நடைபெறும் இடங்களைப் பற்றி தெரிந்திக்கொள்ள QR ஐ Scan செய்யவும்.

CHILDREN'S TIME
வாரந்தோறும் மாலை 5:00 மணி அளவில் சிறுவர் நேரம் நமது சபையின் யூ டியூப் சேனலில் ஒளிபரப்பப்படும்.

# நமது சபை தாங்கும் ராஜஸ்தான், குஜராத், டெல்லி, பஞ்சாப், அசாம் ஊழியங்கள்.

நமது சபை தாங்கும் 38 மிஷனெரிகளும், 4 மிஷன் பிள்ளைகளுக்காக
ஜெபித்துக் கொள்ளுங்கள், உற்சாகமாய் கொடுங்கள்.

**மாதம் தேவை: ரூ.1,94,100**

**பொறுப்பு: Bro. அர்னால்டு**



**Pr. Daniel Babu** *Gujarath* | **Pr. Stephen Rathod** *Rajasthan* | **Pr. Mandeep kidhay** *Moga* | **Pr. Chaman Masih** *Ablowal* | **Pr. Binu Vijayan** *Tripuri*



**Pr. SawarGill** *Gurdaspur* | **Pr. Peter Masig** *Taran Taram* | **Pr. Sandeep Singh** *Chunnai Kalan* | **Pr. Inderjit Singh** *Mohali* | **Pr. Prasenjit Basumatary** *Assam*



**Pr. Karthick** *Chandigarh* | **Pr. Gurdial Singh** *Dehriwal Droga* | **Pr. Rajkumar** *Kurali* | **Pr. Rajesh** *Mahatpur* | **Pr. Simson** *Karnataka*



**Pr. Happy Masih** *Sarspur* | **Pr. Jirma Lal** *Bazara* | **Pr. Caleb** *Delhi* | **Pr. Heral Kaddara** *Rajasthan* | **Pr. Arionp Kumar** *Ajimar* | **Bro.Sam Guna Seelan** *Sharing Love Mission*



**Pr. Kamal Deep** *Punjab* | **Pr. Godson Joy** *Punjab* | **Pr. Harjeet Kaur** *Nawashar* | **Pr. Jaswinder Kumar** *Delhi* | **Pr. Pritam Singh** *Rajasthan* | **Pr. Sonu** *Makhu* | **Pr. Patras Masih** *Feruyzepur*



**Pr.Dhananjay Nokman** *Assam* | **Pr. Jinod Rabha** *Assam* | **Bro. Prakash** *Shalom Charity Trust* | **Sis. Sugantha** *Shalom Charity Trust* | **Bro. Joshua Bhuriya** *Shalom Charity Trust* | **Sis. Karuna K. Damor** *Madhya Pradhesh*

**மிஷனெரி ஊழியத்திற்கு உங்களால் இயன்றதை அனுப்பி தாங்கலாம்.**

*எங்களது வங்கி கணக்கு எண்:*

**Name** : Assembly of God Church, Pudukottai.
**Bank** : TMB
**A/c No.** : 035100050313093
**IFSC Code** : TMBL0000035
**Branch** : Pudukottai, Tuticorin.

# பராமரிப்புக் குழு

| டிவிஷன் எண் | டிவிஷன் தலைவர் | பராமரிப்புக்குழுக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Bro. **வேதமுத்து,** Sis. **கவிதா** | 16 |
| 02 | Bro. **தனராஜ்,** Sis. **எஸ்தர்** | 18 |
| 03 | Bro. **அற்புதராஜ்,** Bro. **யாக்கோபு** | 19 |
| 04 | Pr. **ராஜன்,** Sis. **கோயில் செல்வி** | 24 |
| 05 | Bro. **ரூபன்,** Sis. **பேன்சி** | 16 |
| 06 | Bro. **சாமுவேல் பீட்டர்,** Bro. **பால்** | 14 |
| 07 | Sis. **ஜெயா ,** Sis.**அமுதா** | 11 |
| 08 | Sis. **மேரி செல்வி,** Sis. **தேன்மொழி** | 15 |
| 09 | Sis. **வசந்தா ,** Sis. **காஞ்சனா** | 16 |
| 10 | Sis. **சாராள் ஜெயராணி,** Bro. **சதீஷ்** | 12 |
| 11 | Sis. **பொன்செல்வி,** Bro. **அலைக்ஸ்** | 19 |
| 12 | Bro. **ஜெபஞான குணசிங்,** Bro. **இம்மானுவேல்** | 13 |

**உங்கள் பகுதியில் செயல்படும் பராமரிப்புக் குழுக்கள் பற்றியும் நடைபெறும் நேரத்தை பற்றியும் தெரிந்து கொள்ள கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும்.**

# சாட்சிகள்

- எனக்கு ஒரு வாரமாக இடுப்புக்கு கீழே வலி உட்காரவும் நிமிரவும் முடியாமல் அதிக வலியால் மிகவும் கஷ்டப்பட்டேன். கர்த்தர் சுகம் தந்தால் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணினேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சுகம் தந்தார். அதற்கு பிறகு வலி இல்லை. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அல்லேலூயா.

– **Sis.** ரூத், மேலக்கூட்டுடங்காடு

- எனக்கு கடந்த நாட்களில் உள்ளங்காலில் ஒரே காந்தல் எனக்கு நடக்க முடியவில்லை. பாஸ்டரிடம் சொல்லி ஜெபித்தேன். பாஸ்டர் ஜெபித்த பிறகு எனக்கு காந்தல் இல்லை. சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி.பாஸ்டருக்கு நன்றி. எனது பேத்தி குடும்ப பிரச்சனையால் மன உளைச்சலில் வீட்டில் இருந்த மாத்திரயை அதிகமாக எடுத்து சாப்பிட்டதால் ஒரு நாள் முழுவதும் கண் திறக்காமல் இருந்தாள். பாஸ்டரம்மாவிடம் சொல்லி ஜெபித்தோம். தேவன் பாதுகாத்தார். இப்போது சுகத்தோடுஇருக்கிறாள். தேவனுக்கு கோடான கோடி நன்றி.

– **Sis.** ஞானத்தங்கம், கூட்டாம்புளி

- எனது தங்கச்சிக்கு 13 வருடம் குழந்தை இல்லாமல் இருந்தாள். இப்பொழுது ஒரு பெண் குழந்தையை தேவன் கொடுத்தார். எனது அக்கா மகளுக்கு ஜெபித்தபடி பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. தேவனுக்கு கோடான கோடி நன்றி.

– **Sis.C.** மல்லிகா, புதுக்கோட்டை

A.G திருமண இணைப்பு ஊழியம்

1. சனி மற்றும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 10:00–12:30 மணி வரை சபை அலுவலகத்திற்கு நேரில் வரலாம்.
2. தற்போது எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் 4 தேவை.
3. அலுவலகத்திலுள்ள விண்ணப்ப படிவத்தை நிரப்பித்தர வேண்டும்.
4. விண்ணப்பிப்பவர் இரட்சிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.
5. பதிவு கட்டணம் ரூ.10/– மட்டும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

செல்: 9345712349 விண்ணப்ப படிவம் QR Code இல் இணைக்கப்பட்டுள்ளது.

அமாவாசை ஜெபம்

25 ஜூலை வெள்ளி

செய்வினைகள், பில்லிசூனியம், அசுத்த ஆவிகளின் போராட்டங்கள் மேற்கொள்ள ஜெபிக்க வாருங்கள்.

இடம்: கெத்சமனே பிரேயர் பார்க் (தேரி)

நேரம்: இரவு 10.00-12.30 மணி வரை

13 வயதிற்க்கு மேல் உள்ள வாலிபர்கள் மற்றும் ஆண்கள் பங்கு பெறலாம்.

வாருங்கள் ஆசீர்வதிக்கப்படுங்கள்...

பொறுப்பு: Pr. ராஜன் (உதவி ஊழியர்)

LOCATION

# குறுக்கெழுத்துப் போட்டி

Sis. சாந்தா

ஜூலை மாதம்– 2025

மாற்கு எழுதின சுவிசேஷம் அதிகாரம் 1 முதல் 16 வரை

**(வசன இருப்பிடம் எழுதவும்)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | |
| | 2 | | | | | |
| | | 3 | | | 4 | |
| | 5 | | | | | |
| 6 | | | | | | 7 |
| 8 | | | 9 | | | |
| | | | | | | 10 |

**வலமிருந்து இடம்**

01) மனந்திரும்பி எதை விசுவாசியுங்கள் என்றார்?

04) வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே என்ன பண்ணினார்?

07) உங்களை யாரைப்பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்?

10) அவர் எந்த ஊருக்கு வந்தார், அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்?

**இடமிருந்து வலம்**

02) இயேசு எந்த மணி நேரத்தில் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்?

05) இயேசு எதின் பின்னணியத்தில் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்?

09) எது பலவீனமுள்ளது என்றார்?

**மேலிருந்து கீழ்**

03) வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு என்ன என்றார்?

05) நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே எங்கே போவேன் என்றார்?

08) அந்த நாளையும், அந்த நாழிகையையும் யார் ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் என்றார்?

**கீழிருந்து மேல்**

05) இயேசு தாம் தெரிந்து கொண்டவர்களை பூமியின் எந்த முனை முதற்கொண்டு கூட்டிச் சேர்ப்பார்?

06) கர்த்தரால் நடந்த அடையாளங்களினாலே எதை உறுதிப்படுத்தினார்?

07) புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் யாரோடே இசைந்திருப்பான்?

**20ம் தேதிக்குள் தபால் மூலம் அனுப்பவும் அல்லது அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கவும்**

## பரிசு பெறும் 5 நபர்கள்:

1) Sis.R. புஷ்பம், வாகைகுளம்
2) Sis.R. லலிதா, பேரூரணி (ஊ.கா)
3) Sis. ஜெமிமா, தளவாய்புரம்
4) Sis. ஜெயா, N.Kகாடு
5) Sis. அன்னாள், காமராஜ் நகர்

## எங்களது வங்கி கணக்கு எண்:

இந்த செய்தி மலர் ஊழியத்திற்க்காக ஜெபியுங்கள். இதன் தேவை சந்திக்கப்பட காணிக்கை அனுப்பலாம்,

**Name : J. Samuel Jebaraj**
**Bank : ICICI - Bank**
**A/c No. : 613901506045**
**IFC Code : ICIC 0006139**
**Branch : Tuticorin**

*UPI ID:*

***prjsjebaraj@okaxis***

## இந்த மாதம் போதகர் செல்லும் ஊழியங்கள்:

07.07.2025 – திங்கட்கிழமை

**ஊழியர்கள் கூடுகை - திருநெல்வேலி**

15,16,17.07.2025 செவ்வாய், புதன், வியாழன்

**போதகர்கள் மாநாடு - மதுரை**

22.07.2025 – செவ்வாய்க்கிழமை

**முழு இரவு ஜெபம் - தூத்துக்குடி**

23,24.07.2025 – புதன், வியாழன்

**இளம் போதகர்கள் மாநாடு - கடலூர்**

25.07.2025 – வெள்ளிக்கிழமை

**அமாவாசை ஜெபம் - பிரையர் பார்க்**

27.07.2025 – ஞாயிற்றுக்கிழமை

**ஆண்கள் முகாம் - வள்ளியூர்**

29.07.2025 – செவ்வாய்க்கிழமை

**போதகர்கள் ஐக்கிய கூடுகை - சென்னை**

## ஞாயிறு தோறும் 5 ஆராதனைகள்

1 - வது ஆராதனை - காலை 06:00-07:30

2 - வது ஆராதனை - காலை 08:30-10:00

3 - வது ஆராதனை - காலை 11:00-12:30

4 - வது ஆராதனை - மாலை 05:00-06:00 ஹிந்தி

5 - வது ஆராதனை - மாலை 06.30-08:00

**உபவாச ஜெபம்**

சனிதோறும் காலை 10:00 - 12:30

**பெண்கள் ஆராதனை**

செவ்வாய்தோறும் காலை 10:00 - 11:30

**அதிகாலை ஆராதனை**

தினந்தோறும் காலை 6:00 - 6:40

**அமாவாசை ஜெபம்**

அமாவாசை இரவு 10:00 - 12:30

வேதமே வெளிச்சம் (Zoom meeting) வியாழன் தோறும் இரவு 8.00 மணிக்கு
MEETING ID: 337 022 2215, PASSCODE: 1234

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல
நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர்
புத்திசொல்லக்கடவோம். எபி 10:25




எங்கள் முகவரி:
Rev. Dr. J. சாமுவேல் ஜெபராஜ்
பரிசுத்த பர்வதம் ஏ.ஜி சபை, சீயோன் நகர்,
புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - 628 103,
தமிழ்நாடு, இந்தியா.
www.hmagchurch.in
holymountainag@gmail.com
+91 98421 71014, +91 6369097825
+91 93457 12349

ABOUT US
SCAN ME

To ......................................................................................................

......................................................................................................

......................................................................................................